


இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 13-05-2023


# திராவிடப் பண் பாடுவோம் 2

'திராவிடம்' என்ற சொல் குறித்த புரிதல் ஆளுநருக்கு இல்லை. இதனை வெற்று முழக்கமாக அவர் நினைக்கிறார். இது வெற்றி முழக்கமாக 100 ஆண்டுகளாக இருக்கிறது. இரா.இராகவய்யங்கார், தான் எழுதிய 'தமிழ் வரலாறு' நூலில், **"வடமொழியாளர், த்ரமிளர் எனத் தமிழ்மொழியாளரையும், த்ரமிளம், த்ராவிடம் என அவர் நாட்டினரையும் மொழியினரையுங் குறித்தனர் என்பது உண்மை"** என்கிறார். இச்சொல்லை அடிமைப்படுத்தும் சொல்லாக ஆரியம் பயன்படுத்தியது. அதனையே அரசியல் சொல்லாக மாற்றினார் தந்தை பெரியார்.

'எவ்வினையு மோப்புதலாற் றிராவிட மென்றியல் பாடை' என்று காஞ்சிபுராணத்தில் வருகிறது திராவிடம். "........ வடமொழியிலே வல்லான் ஒருத்தன் வரவும் திராவிடத்திலே வந்ததா விவகரிப்பேன்" என்கிறார் தாயுமானவர். இப்படி தமிழ் இலக்கியத்தில் உள்ளதுதான் திராவிடம் என்ற சொல் ஆகும். தமிழ் என்ற மொழியையும், ஒரு தேசத்தையும் குறிப்பதுதான் திராவிடம் என்ற சொல் என்று சதுரகராதி, யாழ்ப்பாண அகராதி, தரங்கம்பாடி அகராதி ஆகியவை சொல்கின்றன. சத்தியகுலத்தைச் சேர்ந்த அடித்தட்டு மனிதனாக திராவிடரை அடையாளப்படுத்துகிறது யாழ்ப்பாணம் அகராதி. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பெயரகராதியும் இதையே சொல்கிறது. 'ஆந்திர கருநாடக தேசங்களுக்குத் தெற்கேயுள்ள தேசம்' என்கிறது.

அபிதானசிந்தாமணியைத் தொகுத்த ஆ.சிங்காரவேலு, 'தமிழ், ஆந்திரம், கன்னடம், மகாராஷ்டிரம், கூர்ச்சரம் – தட்சிணத்திலிருந்து கன்னியாகுமரி ஈறாக உள்ள தேசம்' என்கிறார். 'தமிழுக்கு ஆரியரிட்ட ஒரு பெயர்' என்று சொன்னதும் இவர்தான். திராவிடம் என்றால் தமிழ் மொழி என்கிறது இலக்கியச் சொல்லகராதி. இதனையே நா.கதிரை வேற்பிள்ளையின் தமிழ் மொழி அகராதியும், வெள்ளிவிழாப் பேரகராதியும் உறுதி செய்கிறது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, கொடகு, கோடா ஆகிய தென்னிந்திய மொழிகளை திராவிட மொழிகள் என்கிறது மதுரைத் தமிழ்ப் பேரகராதி. நான்கு சாதியில் ஒன்று என்கிறது இந்நூல்.

**"தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆகிய நான்கும் திராவிட மொழிகளில் முக்கியமானவை. ஆரியர் முற்காலத்தில் தென்னாடு சென்ற தஸ்யுக்களைத் திராவிடரென அழைத்து வந்தனரென்றும், அதிலிருந்தே அவரது மொழி திராவிடமெனும் பெயர் பெற்றதென்றும் திராவிடத்தின் திரிசொல்லாகக் கால அளவில் முறையே திராமிட, திராமிள, தமிள, தமிழ் என மாறிற்றென்றும் சிலர் கருதினர்"** என்கிறது தமிழ்நாட்டுக் கலைக் களஞ்சியம். Dravidian – திராவிடர், திராவிட மொழி, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளின் குழுவில் ஒரு மொழி. திராவிட, திராவிட இனத்துக்குரிய, திராவிடருக்குரிய – என்கிறது சென்னைப் பல்கலைக் கழக அகராதி.

செந்தமிழ்ச் சொற்பொருட் களஞ்சியத்தில் செந்தமிழ் செம்மல் இரா. இளங்குமரனார், திராவிடம் என்பதை தமிழ் என்பதைச் சொல்ல முடியாத ஆரியர் த்ரமிள, த்ரமிடம், திராவிடம் என்றனர். தமிழ் என்பதற்குரிய ழ அல்லது ழகர ஒற்று ஆங்கிலத்திலோ வடமொழியிலோ இல்லை என்கிறார். இப்படி வரலாற்றின் தொடர்ச்சியாக இடமாக, இனமாக, மொழியாக, அரசியலாக, கொள்கையாக இருந்து வரும் சொல்தான் திராவிடம் ஆகும்.

**நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்**
**சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்**
**தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்**
**தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே**
**அத்திலக வாசனைபோல் அனைத்துலக இன்பமுற**
**எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே - உன்**
**சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து**
**வாழ்த்துதுமே வாழ்த்துதுமே வாழ்த்துதுமே** – என்ற தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலிலும் '**திராவிட நல் திருநாடும்**' இருக்கிறது.

**ஜன கண மன அதிநாயக ஜெய ஹே**
**பாரத பாக்ய விதாதா.**
**பஞ்சாப சிந்து குஜராத மராத்தா**
**திராவிட உத்கல வங்கா.**
**விந்திய இமாசல யமுனா கங்கா**
**உச்சல ஜலதி தரங்கா.**
**தவ சுப நாமே ஜாகே,**
**தவ சுப ஆஷிஷ மாகே,**
**ஜாஹே தவ ஜெய காதா.**
**ஜன கண மங்கள தாயக ஜெயஹே**
**பாரத பாக்ய விதாதா.**
**ஜெய ஹே, ஜெய ஹே, ஜெய ஹே,**
**ஜெய ஜெய ஜெய, ஜெய ஹே.** – என்ற நாட்டுப் பண்ணிலும் திராவிட இருக்கிறது.

எதை வைத்து காலாவதி ஆகிவிட்டது என்கிறார் ஆளுநர்?

தமிழகத்தைச் சேர்ந்த அனைவரும் சூத்திரர்கள் என்ற கருதுகோளை விதைத்தது மனு. அதன் 10 ஆவது அத்தியாயம் 44 ஆவது சூத்திரத்தில் தமிழகம் என்பது திராவிடம் என்றே அழைக்கப்படுகிறது. "பௌண்டரம், ஔண்டரம், திராவிடம், காம்போசம், யவநம், சகம், பரதம், பால்ஹீகம், சீநம், கிராதம், தநதம், கசம் இத்தேசங்களை யாண்டவர்களனைவரும் மேற்சொன்னபடி சூத்திரராய்விட்டார்கள்" என்கிறது மனு.

யார் சூத்திரர் என்றும் எட்டாவது அத்தியாயம் 415 ஆவது சூத்திரத்தில் கீழ்மைத் தன்மைகள் அனைத்தையும் பொருத்தி அடையாளப்படுத்தியதும் மனுவே.

சூத்திரர்கள் என்ற இழிவுபடுத்தப்பட்டவர்கள் திராவிடர்கள். தமிழர்களே, திராவிடர்கள் என அழைக்கப்பட்டார்கள். அதனால்தான் சூத்திரர் கழகம் – திராவிடர் கழகம் என்ற இரண்டில் எந்தப் பெயரை வைக்கலாம் என்ற போது திராவிடர் கழகம் என்ற பெயரைத் தேர்வு செய்ததாக பெரியார் சொல்கிறார். திராவிடர் கழகம் என்ற பெயர் சூட்டாமல் போனால், சூத்திரர் கழகம் என்றே தான் வைத்திருப்பேன் என்றும் அவர் சொல்லி இருக்கிறார்.

**சூத்திரன் என்ற சொல்லாடல் ஆதியில் இருந்தது என்பதற்கு 'மநுஸ்மிருதி' ஆதாரம் ஒன்றே போதும். அதனை நீட்டத் தேவையில்லை. அந்த சூத்திரர் பழி, எல்லா நூற்றாண்டுகளிலும் தொடர்ந்தது. மன்னராட்சி காலத்தில் தமிழ் மன்னர்களையே ஏமாற்றி வைத்திருந்தது ஆரியம். காலனியாதிக்க காலத்திலும் கரைந்து போகாமல் காத்துக் கொண்டது ஆரியம். இதற்கு வேட்டு வைத்ததுதான் 'திராவிடத்தின்' தொடக்கம். ஆளுநருக்கு அதுதான் கலக்கம்.**

– தொடரும்




ஆளுநர் மாளிகையில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களுடன், நேற்று முன்தினம் (11.5.2023) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அமைச்சரவையின் குழு புகைப்படம்.

## சீன விண்கலம் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தம்!

பீஜிங், மே 13 –

சீனா விண்வெளியில் டியாங்யாங் விண்வெளி நிலையத்தை கட்டி முடித்தது. ஒரே நேரத்தில் 6 பேர் வரை தங்கும் வகையில் இந்த விண்வெளி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் ஆயுட்காலம் 2038ல் முடிவடைவதாக சீனா கணித்துள்ளது. இங்கு முதன்முறையாக கடந்த டிசம்பர் மாதம் சீன விண்வெளி குழுவினர் சென்றனர்.

இந்த நிலையில் தற்போது சீனாவின் தெற்கு தீவு மாகாணமான ஹைனானில் உள்ள வெங்சாங் ஏவுதளத்தில் இருந்து டியான்சூ6 என்ற விண்கலத்தை சீனா அனுப்பியது. அது வெற்றிகரமாக விண்ணில் சரியான சுற்றுப்பாதையில் நிறுத்தப்பட்டுள்ளது. இனி வரும் காலங்களில் இந்த விண்கலம் டியாங்யாங் விண்வெளி நிலையத்துடன் இணைக்கப்பட்டு விண்வெளி உடைகள், எரிபொருள் போன்றவற்றை அதற்கு வழங்கும். மேலும் 16 மனிதர்களையும் அங்கு கொண்டு செல்லும் என சீன விண்வெளி ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (11.5.2023) ஆளுநர் மாளிகையில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட முனைவர் டி.ஆர்.பி.ராஜா மலர்க்கொத்து வழங்கி வாழ்த்துப் பெற்றார். உடன் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் உள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.5.2023) முகாம் அலுவலகத்தில், வில்லிவாக்கம் மேற்கு பகுதிச் செயலாளர் கூ.பீ.ஜெயின் மகள் கே.ஜெ.ஜெனி – ரா.மணிகண்டன் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். உடன் திருமதி. துர்கா ஸ்டாலின் மற்றும் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, தயாநிதி மாறன் எம்.பி., பேராசிரியரின் மகன் அ.அன்புச்செல்வன், பேராசிரியரின் பேரனும் சட்டமன்ற உறுப்பினருமான அ.வெற்றியழகன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



தொழிற்சாலை நவீனமயமாக்கல் - நவீன வகை கார்கள் உருவாக்கம் - மின்வாகன மின்கலன் தொகுப்பு திட்டங்களுக்கு

# ஹூண்டாய் நிறுவனம் ரூ.20 ஆயிரம் கோடி முதலீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்து!

**சென்னை, மே 13-**

**ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனம் ரூ.20,000 கோடி முதலீட்டில், தொழிற்சாலை நவீனமயமாக்கல் மற்றும் நவீன வகை கார்கள் உருவாக்குதல், மின்வாகன மின்கலன் தொகுப்பு, மின் வாகன மின்னேற்று நிலையங்கள் அமைத்தல் ஆகிய திட்டங்களுக்கான வசதிகளை செய்து தருவது குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (11.05.2023) சென்னையில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தென் கொரியா நாட்டைச் சேர்ந்த ஹூண்டாய் மோட்டார் நிறுவனத்தின் நூறு சதவிகித துணை நிறுவனமான ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனம் 20,000 கோடி ரூபாய் முதலீட்டில், தொழிற்சாலையை நவீனமயமாக்கல் மற்றும் நவீன வகை கார்கள் (New Models Car) உருவாக்குதல், மின் வாகன மின்கலன் ஒன்று கூட்டப்பட்ட தொகுப்பு (EV Battery Assembly Pack), மின் வாகன மின்னேற்று நிலையங்கள் (EV charging Stations) அமைத்தல் போன்ற திட்டங்களை மேற்கொள்ளத் தேவையான வசதிகளை செய்து தருவது குறித்து தமிழ்நாடு அரசின் வழிகாட்டி (Guidance) நிறுவனத்திற்கும் ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. பன்நோக்கு திட்டங்களை பெருமளவில் ஈர்த்து, இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கவும், மாநில பொருளாதாரத்தை வலுவடைய செய்திடவும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிர்ணயித்துள்ள 2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி என்ற இலக்கினை அடைந்திட பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, 2024 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 10 மற்றும் 11 ஆகிய தேதிகளில் உலக முதலீட்டா ளர்கள் மாநாட்டினை சிறப்பான முறையில் நடத்தி, பெருமளவிலான முதலீட்டினை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை மேற்கொண்டு வருகிறது.

### ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவன புரிந்துணர்வு ஒப்பந்தம்

ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனம், ஹூண்டாய் மோட்டார் நிறுவனத்திற்கு முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனம் ஆகும். இந்நிறுவனம், இந்தியாவின் முதல் நுண்திறன் நகர்வு ஆற்றல் தீர்வுகள் (smart mobility solutions) வழங்குநராகவும், சீருந்து ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கும் நிறுவனமாகவும் உள்ளது. அதன் தொடக்கத்திலிருந்தே, 'மனித குலத்திற்கான முன்னேற்றம்' என்ற ஹூண்டாயின் உலகளாவிய தொலைநோக்குப் பார்வையுடன், தொழில் துறைக்கு முன்னணி தொழில் நுட்பத்துடன் நகர்வு ஆற்றல் தீர்வுகளை வழங்குவதன் மூலம் வருங்கால சந்ததியினருக்கு நிலையான கண்ணோட்டத்தை உருவாக்குகிறது.

சென்னையை அடுத்த இருங்காட்டுக்கோட்டையில் ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனத்தின் முதலாவது ஆலை அமைப்பதற்கு 10.12.1996 அன்று முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இந்நிறுவனம் தற்போது இந்தியா முழுவதும் 1340 விற்பனை மையங்களையும், 1502 சேவை மையங்களையும் கொண்ட வலுவான வலையமைப்புடன் செயல்பட்டு வருகிறது. 12 பிரிவுகளில் வலுவான சீருந்து மாடல்களைக் கொண்டுள்ளதுடன் முழுமையான ஒருங்கிணைந்த அதிநவீன உற்பத்தி ஆலை, மேம்பட்ட உற்பத்தி, தரம் மற்றும் சோதனை திறன்களை கொண்டுள்ளது. இந்நிறுவனம், ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு, லத்தீன் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆசியா பசிபிக் போன்ற 85 வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் ஹூண்டாய் மோட்டார் நிறுவனத்தின் உலகளாவிய ஏற்றுமதி மையத்தில் முக்கிய பங்களிப்பை அளித்து வருகிறது.

ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் (HMIL) நிறுவனம் 20,000 கோடி ரூபாய் முதலீட்டில், தொழிற்சாலையை நவீனமயமாக்கல் மற்றும் நவீன வகை கார்கள் உருவாக்குதல், மின் வாகன மின்கலன் கூட்டப்பட்ட தொகுப்பு, மின் வாகன மின்னேற்று நிலையங்கள் அமைத்தல் போன்ற திட்டங்களை மேற்கொள்ள தேவையான வசதிகளை செய்து தருவது குறித்து தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனத்திற்கும் ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

26 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் ஹூண்டாய் மோட்டார்ஸ் இந்தியா லிமிடெட் நிறுவனம், மேலும் 20,000 கோடி ரூபாய் முதலீடு செய்து தனது தொழில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முன்வந்திருப்பது, உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்புகள் மற்றும் தொழில் செய்வதற்கு உகந்த சூழலை தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளதற்கும், தெற்காசியாவிலேயே முதலீட்டிற்கு மிகவும் உகந்த இடமாக தமிழ்நாடு திகழ்ந்து வருவதற்கும் மேலும் ஒரு சான்றாகும்.

இந்நிகழ்ச்சியில், நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே. விஷ்ணு, ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் உன்சூ கிம், நிர்வாக இயக்குனர் (கார்ப்பரேட் விவகாரங்கள்) டி.எஸ்.கிம், துணைத் தலைவர் (நிதி) டிசரவணன், அசோசியேட் துணைத் தலைவர் புனீத் ஆனந்த் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக கூட்ட அரங்கில், நேற்று முன்தினம் (11.05.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை சார்பில் தண்டையார்பேட்டை காமராஜர் நகர் அரசு அச்சக பணியாளர்களுக்கான புதிய குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார். உடன் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், எஸ்.எஸ்.சிவசங்கர், மேயர் திருமதி ஆர்.பிரியா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஜெ.ஜான் எபினேசர், துணை மேயர் மு.மகேஷ் குமார், செய்தித் துறை செயலாளர்இரா. செல்வராஜ், துறை இயக்குநர் த.மோகன், அச்சுத் துறை இயக்குநர் திருமதி மு.அருணா ஆகியோர் உள்ளனர்.